## தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை – 2016

-----------------------------------------------------------------------------------------------

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1984 இன் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2017 யூன் 15 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

----------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்தின் 14 ஆம் பந்தியின் பிரகாரம் சபையின் சொத்துக்கள் உருப்படி மற்றும் அண்மித்த எதிர்கால நலன்களோ அல்லது சேவை சாத்தியவளமுள்ள போது அவை வேறாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் இரண்டு காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 87 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் காணி தொடர்பாக பின்வரும் வெளிப்படுத்தல்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- உருப்படி அடிப்படையில் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள் மற்றும் பொறுப்புக்களுக்காக பாதுகாப்பிற்காக வெளியிடப்பட்டுள்ள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் இருப்பு மற்றும் பெறுமதிகள்

- ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கையேற்பதற்காக உடன்படிக்கை மற்றும் கடப்பாடு அளவு

(இ) நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணமாக கிரயம் ரூபா 39,282,116 தொகையான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் அட்டுறு செலவினத்திற்காக போதியளவு ஓதுக்கீடு செய்யப்படாமையால் அட்டுறு செலவினம் ரூபா 402,815 ஆல் விஞ்சி 2017 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது வெளிநாட்டு சுற்றுலாவொன்றிற்காக செலவினம் மேற்கொள்வதற்காக வங்கிக்கு ரூபா 1,045,992 ஆன நிலையான கட்டளையொன்று வழங்கப்பட்டிருக்கையில் அப்பணத்தை அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு பேரேட்டின் பிரகாரம் ரூபா 22,616,678 ஆக இருந்த போதிலும் வருமானக்கூற்று மற்றும் நிலையான சொத்துக்களுக்குரிய பட்டோலையின் பிரகாரம் ரூபா 22,639,478 என இரண்டு பெறுமதிகள் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நிதிக்கூற்றுக்களை சமப்படுத்துவது தொடர்பாக சிக்கலொன்றாக இருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் இறுதியில் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான பட்டோலைகளின் பெறுமதிகளுக்கிடையே நான்கு வகையான சொத்துக்களின் ரூபா 497,071 கூடுதலாகவும் மூன்று சொத்துக்கள வகைகளில் ரூபா 510,533 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் இறுதியில் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமானத்தேய்வின் பெறுமதி மற்றும் நிறுவகத்தினால் பெறுமானத்தேய்வு செய்தல் பட்டோலையின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமனத்தேய்வு பெறுமதிக்கிடையே ரூபா 6,685,931 ஆன தேறிய வேறுபாடு காணப்பட்டது.

(இ) ஐந்து வகையான சொத்துக்களின் சொத்துக்கள் பதிவேடு மற்றும் பேரேடுகளுக்கு இடையே பெறுமதி ரூபா 1,928,853 ஆன தேறிய வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) ஐந்தொகையில் கிடைக்க வேண்டிய இடர் கடன் மற்றும் விசேட முற்பணங்களாக ரூபா 9,870,610 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பட்டோலையில் (குறிப்பு இலக்கம் 17) அம்மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,858,175 ஆக இருந்தமையால் ரூபா 12,435 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

### 2.2.4 தொங்கல் கணக்கு

முன்னைய ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த தொங்கல் கணக்கின் மீதி ரூபா 480,900 தொகையை மீளாய்வாண்டின் போதும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு விடயங்களுக்கு எதிராக காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | பெறுமதி (ரூபா) | சமர்ப்பிக்கப்பட்டிருக்காத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | காணி | 11,067,487 | உரித்துறுதி மற்றும் உடன்படிக்கை |
| (ஆ) | இரசாயன பொருள் இருப்பு | 2,535,326 | பொருள் மெய்மையாய்வு அறிக்கை |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்து வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்ட முற்பண மீதிகள் ரூபா 1,782,060 ஆக இருந்ததுடன் அம்மீதிகள் எந்த வருடத்திலிருந்து இருந்து வருவதாக குறிப்பாக இனங்காண முடியாதிருந்தன.

(ஆ) 11 வெளி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 184,313 ஆன வைப்புக்களுக்குரிய பற்றுச்சீட்டுக்கள் சபையிடம் காணப்படாமையால் அவ்வைப்புத் தொகையை அறவிடுவது தொடர்பில் ஆபத்தொன்று காணப்பட்டது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதப் பொருளிற்கு அடிமையான நபர்கள் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) அதிகாரச் சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு | தனியார் சிகிச்சை நிலையங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சிகிச்சைகள் தொடர்பான வெற்றியளிப்பு தொடர்பில் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களின் பணிப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய கால ரீதியான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 104(3) | வாகனங்கள் விபத்துக்கள் தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 109(1)(ஆ) | வாகனங்கள் விபத்துக்கள் தொடர்பான நட்டங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 569 III ஆம் வகுப்பு | வெவ்வேறு தன்மையிலான வைப்புக்கள் ‘‘நானாவித வைப்புக்கள்’’ என்ற பெயரில் பொதுக் கணக்கின் கீழ் செய்யப்பட வேண்டிய போதிலும் சபையினால் ரூபா 506,813 தொகையான வைப்புக்களுக்காக அவ்வாறான கணக்கொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப் பிரமாணம் 751 | கிடைக்கப்பெறும் சகல பொருட்களும் உடனடியாக பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் சபையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 888,995 பெறுமதியான பொருட்கள் பொருட் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டி ருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 754 | ஒவ்வொரு ஆண்டின் இறுதியின் போது பொருட் பதிவேடு சமப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1978 திசெம்பர் 09 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 74 மில்லியன் பெறுமதியான சொத்துக்களுக்காக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 37,183,014 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 14,110,836 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 23,072,178 ஆல் அதிகரித்திருந்தது. செயற்பாட்டு செலவினம் ரூபா 69,217,174 ஆல் அதிகரித்திருந்தமை பற்றாக்குறையின் அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது தொடர்ச்சியான நிதிப் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 15,013,481 தொகையான அது மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 37,183,014 ஆக இருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 36,922,418 தொகையான சபையின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதி ரூபா 81,587,124 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------------

### 4.1 செயலாற்றல்

----------------------------------

1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரச்சட்டத்தின் நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- அபாயகர ஔடதங்கள் துஷ்பிரயோகம் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பிலான தேசிய கொள்கையொன்றை உருவாக்குதல், மீளாய்வு செய்தல், அத்தகைய கொள்கைகள் தொடர்பாக தேசிய கொள்கையொன்றை தயாரித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் அவ்வாறான கொள்கைகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் சமர்ப்பித்தல்.

* சபையின் அதிகாரங்களைப் செயற்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து நன்கொடைகளையும் மானியங்களையும் பெற்றுக்கொள்ளல்.

* அபாயகரமான ஔடதங்களைத் தடுப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள முகவர் நிறுவனங்களின் நடவடிக்கைகளை கூட்டிணைத்தல்.

* போதைப்பொருட்களுக்கு அடிமையான நபர்களுக்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தல், சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் தேசிய போதைப்பொருள் பயன்பாடு மற்றும் நிவாரணங்கள் துர்ப்பிரயோகம் தொடர்பான கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

* அபாயகரமான ஔடதங்களின் பாவனையின் பரவல், அதற்கான காரணங்கள் மற்றும் அபாயகரமான ஔடதங்களின் பாவனையின் மூலம் ஏற்படும் சட்ட, மருத்துவ, சமூக, கலாசார மற்றும் பொருளாதார சிக்கல்கள் தொடர்பான ஆராய்ச்சி கற்கைகளை நடாத்துதல் மற்றும் அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொறுப்பேற்றல், போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட தேசிய பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புக்கள் மற்றும் முகவர்களுடன் தொடர்பினைப் பேணுதல்.

  மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் தேசிய ஆய்வுகூடத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயலாற்றல் கீழே காட்டப்பட்டுள்ளன.

| இலக்கம் | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|---|
| | | எதிர்பார்த்த இலக்கு | அடையப் பெற்ற எண்ணிக்கை | சதவீதம் % |
| 1. | விலை மற்றும் தூய்மையான வீதி ஹெரொய்னுக்கிடையிலான இடையிலான தொடர்பினை இனங்காண்பதற்கு நடாத்தப்பட்ட பகுப்பாய்வு மற்றும் வீதி ஹெரொய்னில் உள்ளடங்கியுள்ள புதிய கலப்படங்களின் விளைவிற்காக நடாத்தப்பட்ட பகுப்பாய்வு | 360 | 133 | 36.9 |
| 2. | (i) மேலதிக உணவு மாதிரிகளின் உற்பத்தி பகுப்பாய்வு | - | 06 | - |
| | (ii) விளையாட்டின் போது பயன்படுத்தப்படும் வளர்சிதை பொருட்கள் உள்ளடக்கப்பட்டதை அறிய மேற்கொள்ளப்பட்ட உயிரியல் சார்ந்த பகுப்பாய்வு | - | 01 | - |
| 3. | மதுசார மாதிரி பகுப்பாய்வு | - | 67 | - |
| 4. | வளர்சிதை மூலப்பொருட்கள் கொண்டுள்ள பாலுறவு மற்றும் மனோவியல் தாக்கங்களின் மதிப்பீடு நடாத்தப்பட்ட உயிரியல் மாதிரிகளின் பகுப்பாய்வு | | | |
| | மாதிரிகளின் எண்ணிக்கை | 180 | 63 | 35.0 |
| | பரிசோதனைகள் எண்ணிக்கை | - | 121 | |
| 5. | ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் மற்றும் குற்றங்களை தவிர்த்தல் அலுவலகத்தின் மூலம் வழங்கி இருக்கும் ஈ இலத்திரனியல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 48 | 20 | 41.7 |
| | - சமூகமளித்தவர்களின் எண்ணிக்கை | - | 123 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | (i) | பாலுறவு மற்றும் மனோவியலை இனங்காணப்பதற்கு அமுலாக்கல் குறைந்த நிறுவனங்களினை கண்காணிப்பதற்கான வெளிக்கள பரிசோதனைகளின் தயாரிப்பு | 60 | 07 | 11.7 |
| | (ii) | நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக தேவையான விஞ்ஞானம் சார்ந்த சேவைகளை வழங்குதல் | - | 01 | - |
| | (iii) | இலங்கை சுங்கத்திற்காக தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பினை வழங்குதல் | - | - | - |
| 7. | | ஆராய்ச்சி வெளியீடுகள் | - | 01 | - |
| 8. | | ஆய்வுகூடத்தின் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகள் நியமங்களுக்கு இணங்க பேணிச்செல்லல். | /z/≤2 | 2016 முதலாவது சுற்றின் பெறுபேறுகள் கிடைப்பதற்கு உள்ளது | 100 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 8 செயலாற்றல் துறைகளுக்கு இடையே மேலதிக உணவு உற்பத்திகள் மாதிரி பகுப்பாய்வு, விளையாட்டுக்களின் போது பயன்படுத்தப்படும் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் மருந்துகளில் உள்ளடக்க பொருட்கள் உள்ளதாக மேற்கொள்ளப்பட்ட உயிர் விஞ்ஞான ரீதியான மாதிரி பகுப்பாய்வு, மதுசார மாதிரி பகுப்பாய்வு, பாலுறவு மற்றும் மனோவியலை இனங்காணப்பதற்கு சட்டத்தை செயற்படுத்தும் நிறுவனங்களுக்கு வெளிக்கள பரிசோதனைத் தொகுதிகளை தயாரித்து வழங்குதல், நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக தேவையான விஞ்ஞானம் சார்ந்த சேவைகளை வழங்குதல், இலங்கை சுங்கத்திற்காக தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பினை வழங்குதல் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகள் போன்ற துறைகளில் இலக்கிடப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை குறிப்பிடப்படாமையால் செயலாற்றலின் செயன்முன்னேற்றத்தை கணக்காய்விற்கு உறுதிப்படுத்த முடியாதிருந்தது. மேலும் 4 துறைகளில் செயலாற்றல் 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(ஆ) ஆய்வுகூடம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகள் நியமங்களின் பிரகாரம் பேணிச்செல்லும் சரியானதன்மையைக் காண்பிக்கும் பரிசோதனைகளின் பெறுபேறுகள் கிடைப்பதற்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன்செயலாற்றல் 100 சதவீதம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

செயல்நிமித்த கட்டுநிதி அது வழங்கப்பட்ட செயற்பாடு முடிவடைந்த உடனே தீர்க்கப்பட வேண்டிய போதிலும் முற்பணங்களைத் தீர்ப்பதற்காக 14 நாட்கள் முதல் 141 நாட்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 78,850 ஆன 2017 மார்ச் 15 ஆந் திகதி வரையிலும் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் வழங்கப்பட்ட தொகையில் 50 சதவீதத்தினை விட குறைவாக செலவிடப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் ரூபா 107,595 தொகையான முற்பணங்கள் உரிய செயற்பாடுகளுக்காக செலவிடப்படாமல் 02 நாட்கள் முதல் 141 நாட்கள் வரையான காலம் நிறுத்திவைக்கப்பட்டு மீண்டும் தீர்வுசெய்யப்பட்டிருந்தது.

## 4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கு எழுதுகருவிகளைக் கொள்வனவு செய்வதற்காக 2016 பெப்ரவரி மாதத்தில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,068,605 ஆன எழுதுகருவிகள் 2016 நவம்பர் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் தேவைப்பாடொன்று இல்லாதிருக்கும் போது எழுதுகருவிகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய மாதக ஆய்வுகூடத்தின் இருப்பு அரசின் இரசாயனப் பகுப்பாய்வாளரால் கணிப்பீடு செய்யும் போது இருப்பு அறிக்கையில் 13 இரசாயன பொருட்களின் பெறுமதி ரூபா 89,343 ஆல் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 9 இரசாயன பொருட்களின் பெறுமதி ரூபா 45,888 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) 2016 ஆம் ஆண்டின் போது தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் வெளிநாட்டு பிரயாணச் செலவினத்திற்காக ரூபா 4,823,223 செலவிடப்பட்டிருந்ததுடன் அத்தொகையில் ரூபா 3,067,602 தொகை அதாவது 64 சதவீதம் சபையின் தலைவருக்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இம்முழுச் செலவினம் 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 77 சதவீத அதிகரிப்பொன்றாகும்.

(ஈ) மேற்படி செலவினத்திற்கு மேலதிகமாக சபையினால் செயற்படுத்தப்பட்ட UNDCP 1995 செயற்திட்டத்தின் நோக்கங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்படாதிருந்துடன் செயற்திட்ட பணத்திலிருந்து ரூபா 1,957,830 தொகை பணிப்பாளர் நாயகத்தின் வெளிநாட்டு செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

## 4.4 நிதியக் குறைப்பயன்பாடு

மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் 06 நடைமுறைக் கணக்குகளுக்குரிய ரூபா 9,330,322 ஆன மீதிகள் 05 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்ற வகையில் வங்கிக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## 4.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

2014 ஏப்ரல் 30 ஆந் திகதி ரூபா 2,971,405 செலவிடப்பட்டு ஹோமாகம பிரதேசத்தில் 40 பேர்ச் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆக்கபூர்வமான செயற்பாடொன்றிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஆசிய மற்றும் பசுபிக் வலய சட்ட அமுலாக்கல் தேசிய நிறுவனத்தின் மாநாடு (HONLEA) 2016 யூன் 20 ஆந் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடாத்துவதற்காக திறைசேரியிடமிருந்து சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 12,720,000 தொகையில் ரூபா 1,068,726 தொகை சட்டமும் சமாதானமும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சர் அமெரிக்கா ஐக்கிய குடியரசில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் விசேட பொதுக்கூட்டத்திற்கு சமூகமளிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது.

## 4.7 ஏனைய நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்துதல்

சுகாதார அமைச்சிற்கு சட்டரீதியான உரித்துக் காணப்படும் காணி மற்றும் கட்டிடமொன்றில் சபையின் தலங்கம சிகிச்சை நிவாரண நிலையம் பேணிச் செல்லப்பட்டு வந்ததுடன் அதற்கான உடன்படிக்கை 1993 யூன் 01 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் அது 2017 மார்ச் 15 ஆந் திகதி வரை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

சபையின் ஆரம்பத்திலிருந்து உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 கொள்வனவுத் திட்டம்

2006 அரசின் பெறுகைகள் வழிகாட்டிகள் கோவையின் 4.2.1 (ஆ) மற்றும் (உ) பிரிவுகளின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டு (03) காலப்பகுதிக்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் பிரதான திட்டத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும், சபையினால் தயாரிக்கப்பட்ட திட்டம் ஓராண்டிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும்** | | **அவதானிப்புக்கள்** |
| --- | --- | --- |
| (அ) கணக்கீடு | (i) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்கு புத்தகங்கள் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | நாட்குறிப்பு பதிவுகளுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமை. |
| (ஆ) சொத்துக் கட்டுப்பாடு | | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை முறையாகப் பராமரிக்காமை. |
| (இ) நிதி முகாமைத்துவம் | (i) | செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள் காணப்பட்டமை |
| | (ii) | பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் பணத்தை செலுத்துதல் |
| (ஈ) மனித வள முகாமைத்துவம் | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (உ) செலவினக் கட்டுப்பாடு | | திட்டமிடப்படாத செயற்பாடுகளை மேற்கொள்ளல் |